பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

30 08 2025 SATURDAY 7.15 PM

ஆகாஷவாணி
தலைப்புச் செய்திகள்

- சீனாவில் நடைபெறவுள்ள 25-ஆவது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சிமாநாட்டில் பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை பங்கேற்கிறார்.
- உற்பத்திக்கான இந்தியா இயக்கத்தின்கீழ் நாட்டின் முதலாவது Tempered Glass தொழிற்சாலையை உத்தரப்பிரதேச மாநிலம் நொய்டாவில் மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தொடங்கிவைத்தார்.
- அமெரிக்க வரி விதிப்பால் பாதிக்கப்பட்டுள்ள தொழில்களை பாதுகாக்க மத்திய அரசு புதிய கொள்கையை வகுக்க வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.
- ஐந்து பில்லியன் டாலர் அளவுக்கு வெளிநாடுகளுக்கான நிதியுதவியை நிறுத்த அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார்.
- .உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ரங்கி ரெட்டி – சிராக் ஷெட்டி இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

- இனி விரிவான செய்திகள்-

<<<<<<<<>>>>>>>

சீனாவில் நடைபெறவுள்ள 25-ஆவது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சிமாநாட்டில் பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை பங்கேற்கிறார்.

இரண்டு நாடுகள் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மோடி இன்று தமது ஜப்பான் பயணத்தை முடித்துக்கொண்டு சீனாவின் Tianjin சென்றடைந்தார்.

இம்மாநாட்டையொட்டி, உறுப்பு நாடுகளின் தலைவர்களை பிரதமர் சந்தித்து, மண்டல பாதுகாப்பு, நீடித்த வளர்ச்சி, போக்குவரத்து, தகவல் தொடர்பு, உலகளாவிய ஒத்துழைப்பு உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து பேச்சு நடத்தவுள்ளார்.

20 நாடுகளின் தலைவர்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளை சேர்ந்த 10-க்கும் மேற்பட்ட தலைவர்கள் ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் கலந்துகொள்கின்றனர்.

இம்மாநாட்டில், ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புதினும், பிரதமர் திரு நரேந்திர மோடியுடன் கலந்துகொள்கிறார்.

<<<<<<<<>>>>>>>

*உற்பத்திக்கான இந்தியா இயக்கத்தின்கீழ் நாட்டின் முதலாவது Tempered Glass தொழிற்சாலையை உத்தரப்பிரதேச மாநிலம் நொய்டாவில் மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தொடங்கிவைத்தார்.*

*இந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்குத் திட்டத்தின் ஒருபகுதியாக, இந்த தொழிற்சாலை அமைந்துள்ளதாக தெரிவித்தார்.*

*கடந்த 11 ஆண்டுகளில் மின்னணு உற்பத்தித்துறை 11 புள்ளி ஐந்து லட்சம் கோடி ரூபாய் என்ற இலக்கை எட்டி, ஆறு மடங்கு உயர்ந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.*

*நாட்டின் மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதி மூன்று லட்சம் கோடியை கடந்துள்ளதாக குறிப்பிட்ட அவர், இரண்டு புள்ளி ஐந்து மில்லியன் மக்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைத்துள்ளதாக தெரிவித்தார்.*

*நாட்டின் மின்னணு தொழில் கட்டமைப்பு விரைவான வளர்ச்சி பெற்று வருவதாகவும், அவர் கூறினார்.*

*நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7 புள்ளி எட்டு சதவீதம் என்ற உயர்நிலையை எட்டியுள்ளது நாட்டின் நிலையான பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்துள்ளதாக கூறினார்.*

*செல்போன், லேப்டாப் உள்ளிட்ட மின்னணுப் பொருட்களுக்கு தேவையான அனைத்து உதிரி பாகங்களையும் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.*

*சுயசார்பு இந்தியா 2047-ல் வளர்ச்சி பெற்ற இந்தியா ஆகிய பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு இலக்குகளை எட்டுவதற்கு இளைய சமுதாயத்தினர் கடுமையாக உழைத்து தங்களது பங்களிப்பை செலுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.*

*ஒட்டுமொத்த உலகமும் இந்தியாவின் வளர்ச்சி குறித்து பெரிய எதிர்பார்ப்புகளை கொண்டுள்ளதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.*

*<<<<<<<<>>>>>>>*

*அமெரிக்கா விதித்துள்ள 50 சதவீத வரியால் பாதிக்கப்பட்டுள்ள துணிநூல் ஏற்றுமதி உள்ளிட்ட தொழில்துறைகளை பாதுகாக்க புதிய கொள்கையை வகுக்க வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.*

இதுதொடர்பாக இம்மாதம் 16-ஆம் தேதி தமிழகத்தில் பாதிக்கப்பட்டுள்ள தொழில்துறையினருக்கு உதவுமாறு பிரதமர் திரு நரேந்திரமோடிக்கு கடிதம் எழுதியதாகவும் தெரிவித்துள்ளார்.

இதன் பயனாக பருத்தி இறக்குமதியில் 11 சதவீத சுங்கவரியை டிசம்பர் 31-ஆம் தேதிவரை நிறுத்திவைத்துள்ள மத்திய அரசின் முடிவை தாம் பாராட்டுவதாக தெரிவித்துள்ளார்.

இதனால் துணிநூல் துறையினருக்கு தற்காலிக நிவாரணம் மட்டும்தான் கிடைக்கும் என்றும், நிரந்தர தீர்வுகாணும் வகையில் மத்திய அரசு புதிய கொள்கையை கொண்டுவர வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்றுமதிகளை பாதுகாக்கவும், தொழிலாளர்களை வேலை இழப்பிலிருந்து காப்பாற்றவும் மத்திய அரசுடன் இணைந்து பணியாற்ற மாநில அரசு தயாராக உள்ளதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

<<<<<<<<>>>>>>>

நாட்டின் பொருளாதாரம் விரைவாக வளர்ந்துவரும் சூழ்நிலையில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி ஏழு புள்ளி எட்டு சதவீதமாக உயர்ந்துள்ளது.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசின் பல்வேறு துறைகளும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையால் இந்த வளர்ச்சியை எட்ட முடிந்ததாக பல்வேறு தரப்பு மக்களும் கருத்து தெரிவித்தனர்.

நாட்டின் பொருளாதாரம் விரைவான வளர்ச்சி பெறுவது உலக அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பை உயர்த்தியுள்ளதாக தமிழகத்தின் வேலூரை சேர்ந்த திரு சிவராமன் தெரிவித்தார்.

(Voice Byte – சிவராமன் 18 Sec. )

<<<<<<<<>>>>>>>

தமிழகத்தின் தருமபுரி மாவட்டத்தில், இந்தியன் வங்கி நிதியுதவியுடன் சணல் நார் தயாரிப்பு மற்றும் கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்ய மகளிருக்கு சுயவேலைவாய்ப்புக்கான பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

மகளிரை கொண்டு சணல் நார் பைகள் உள்ளிட்டவற்றை உற்பத்தி செய்யும் தொழில் முனைவோரான திருமதி மீனாட்சி, அரசின் நலத்திட்டங்களை மகளிர் பயன்படுத்திக்கொண்டு தங்களது வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்று கூறினார்.

<<<<<<<<>>>>>>>

நாடாளுமன்ற, சட்டமன்ற நடவடிக்கைகளை சில கட்சிகள் திட்டமிட்டு முடக்குவது ஜனநாயகத்திற்கு உகந்தது அல்ல என்று மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா தெரிவித்துள்ளார்.

புவனேஷ்வரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், அரசியல் கட்சிகள் வெவ்வேறு சிந்தனைகளையும், கருத்துக்களையும் கொண்டிருந்தாலும் ஜனநாயக நெறிமுறைகளுக்கு உட்பட்டே செயல்பட வேண்டியது அவசியம் என்று கூறினார்.

நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு உறுப்பினரையும் மக்கள் நம்பிக்கையோடும், எதிர்பார்ப்புகளோடும் அவையில் பேசுவதற்கு அனுப்பிவைப்பதாக அவர் கூறினார்.

கடந்த மழைக்கால கூட்டத்தொடரின்போது, சில கட்சிகள் ஏற்படுத்திய இடையூறுகள் காரணமாக, குறைந்த நேரமே செயல்பட முடிந்ததாக அவர் கவலை தெரிவித்தார்.

அரசியல் கட்சிகள் தங்களுக்குள் மாறுபட்ட கருத்துக்கள் கொண்டிருப்பதில் தவறில்லை என்றும், ஆனால் அவற்றை ஜனநாயக முறைப்படி அவையில் முன்வைக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவைகளில் நடைபெறும் விவாதங்கள் மதிப்புமிக்கமாகவும். கண்ணியத்துடனும் நடைபெற வேண்டும் என்றும் மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா கூறினார்.

<<<<<<<<>>>>>>>

அமெரிக்கா ஐந்து பில்லியன் டாலர் அளவுக்கு வெளிநாடுகளுக்கான நிதியுதவியை நிறுத்த அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக, வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிவிப்பில், இவ்வாண்டு தொடக்கத்தில் 15 சர்வதேச அளவிலான வளர்ச்சித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த

தொகையை தற்காலிகமாக நிறுத்தி வைக்க முடிவு செய்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச அளவிலான அமைதி காக்கும் நடவடிக்கைகள், ஜனநாயக மாண்புகளை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் போன்றவற்றிற்காக ஒதுக்கப்பட்ட நிதி, நிறுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<<>>>>>>>

மகாராஷ்டிராவில் நேரிட்ட சாலை விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர்.

Dhule Solapur தேசிய நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த லாரி, பாதசாரிகள் மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பாக லாரி ஓட்டுநரை காவல்துறையினர் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அம்மாநில துணை முதலமைச்சர் திரு அஜித் பவார் இரங்கல் தெரிவித்துள்ளார்.

<<<<<<<<>>>>>>>

## விளையாட்டுச் செய்திகள்

உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ரங்கி ரெட்டி – சிராக் ஷெட்டி இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

பாரிசில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 21-12, 21-19 என்ற செட் கணக்கில், மலேசியாவின் Aaron Chia – Wooi Yik இணையை வென்றது.

<<<<<<<<>>>>>>>

காமன்வெல்த் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஒரு வெள்ளி மற்றும் இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

அகமதாபாதில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 86 கிலோ எடைப்பிரிவில் Mehak Sharma வெள்ளிப்பதக்கத்தையும், Martina Devi வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

ஆடவர் 110 கிலோ எடைப்பிரிவில் Lovepreet Singh வெண்கலப்பதக்கம் வென்றார்.

<<<<<<<<>>>>>>>

*தாய்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சாய் கார்த்திக் – தாய்லாந்தின் Thantub Suksumrarn இணை பட்டம் வென்றது.*

*ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை 7-6, 6-3 என்ற செட் கணக்கில், இந்தியாவின் Atharva Sharma – ஜப்பானின் Yuta Tomida இணையை வென்றது.*

*<<<<<<<<>>>>>>>*

*புரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் உத்தரப்பிரதேசம் - தெலுகு அணியையும், மும்பை – குஜராத் அணியையும் எதிர்கொள்கின்றன.*

*<<<<<<<<END>>>>>>>*